| 01 | # முயற்சியாண்மைக்கல்வி<br>## அலகு ரீதியான மீட்டல் செயலட்டை<br>## தரம் 10 |
|---|---|

## முயற்சியாண்மை

**(1)** பின்வரும் கூற்றுகள் சரியாயின் (√) எனவும் பிழையாயின் (×) எனவும் அடைப்பினுள் அடையாளமிடுக.

1. முயற்சியாளர்கள் புதிய யோசனைகள் மற்றும் கருத்துகளை செயல்படுத்த முயல்கிறனர். ( )
2. அதிக வருமானத்தை ஈட்டுவது மட்டுமே முயற்சியாளரின் எதிர்பார்ப்பாகும் ( )
3. முயற்சியாளர்கள் எதிர்கால உலகை மாற்ற பங்களிக்கிறனர். ( )
4. முயற்சியாளர்கள் தடைகளை எதிர்கொண்டு ஆக்கபூர்வமான யோசனைகளை செயல்படுத்த தயங்குகிறார். ( )
5. தனிப்பட்ட நடத்தை மூலம் முயற்சியாளரை அடையாளம் காண முடியும். ( )
6. நிலம் என்ற உற்பத்திக் காரணிக்கு காரீயம் ஓர் உதாரணமாகும். ( )
7. மூலதனம் என்பது பணம் மட்டுமாகும். ( )
8. ஒரு வணிகத்தின் வெற்றி அல்லது தோல்வி இடர் எனப்படும். ( )
9. தேயிலை தொழிற்சாலைத் தொழிலாளியின் சேவை உழைப்பு எனும் உற்பத்திக் காரணியைச் சார்ந்ததல்ல. ( )
10. மாறும் என்பதால் கருதப்படுவது தொடர்ந்து மாறிக்கொண்டிருப்பதாகும். ( )
11. ஒவ்வொரு புத்தாக்கமும் ஒரு பிரச்சனைக்கு தீர்வாக வெளிப்படுகிறது. ( )
12. ஒவ்வொரு வெற்றிகரமான முயற்சியாளரும் இடர் இல்லாத வணிக வாய்ப்புகளைத் தேர்வு செய்கிறார்கள். ( )
13. ஒரு பிரச்சனைக்கு ஒரே தீர்வு என்று நினைப்பது படைப்பாற்றலுக்கு தடையாக இருக்கிறது. ( )
14. ஒரு பெண் தச்சுத் தொழிலில் வேலை செய்வது பொருத்தமற்றது என்று முயற்சியாளர் கருதுகிறார். ( )
15. தொழில் வாய்ப்புகளை தேடியறிந்து புதிய தொழில் முயற்சிகளை மேற்கொள்வது சுற்றுச்சூழலைப் பாதிக்கின்றது. ( )
16. ஆக்கப்பூர்வமான யோசனைகளின் முடிவுகள் வெற்றியடையலாம் அல்லது தோல்வியடையலாம். ( )
17. புதிய கண்டுபிடிப்புகளுக்கு முக்கிய காரணம் ஆர்வமாகும். ( )
18. புத்துருவாக்க நடத்தைகளை மாதிரியாக்குவதன் மூலம் படைப்பாற்றலை வளர்க்க முடியும். ( )
19. ஏற்கனவே உள்ள எண்ணக்கருவிற்கு சமமான ஒரு புதிய வடிவமைப்பு, நீடிப்பு எனப்படும். ( )

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

20. எதிர்பாராத நிகழ்வுகள் புத்துருவாக்கத்திற்கான அடிப்படையாகும். ( )

21. நிச்சயமற்ற தன்மையே இடருக்கான முக்கிய காரணமாகும். ( )

22. இடர் அதிகமாக இருந்தால், வருமானம் குறைவாக காணப்படும். ( )

23. பந்தயம் கட்டுபவர்கள் வெற்றிகரமான முயற்சியாளர்கள் அல்ல. ( )

24. சில இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை நிர்ணயிப்பதன் மூலம் எதிர்காலத்தை அடைய முடியாது. ( )

25. ஒரு முயற்சியாளரின் எதிர்காலம் தொடர்பான கனவு, தோல்வி மற்றும் சவால்கள் போன்றவற்றை நேர் மனப்பாங்குடன் ஏற்றுக்கொள்வது நேர்ச் சிந்தனையுடன் இருப்பதாக கருதப்படும். ( )

26. பகுதி A உடன் தொடர்புடைய விடயங்களை பகுதி B இலிருந்து தெரிவு செய்து, குறிப்பிட்ட எண்ணை பொருத்தமான இடத்தில் இடுக.

A

a. முயற்சியான்மையின் அடிப்படை பண்புகள் ……………………

b. பிரச்சனைகள் ……………………

c. புத்தாக்கத்திற்கான வழிகள் ……………………

d. நெகிழ்வுத் தன்மை ……………………

e. புத்தாக்கத்திற்கு அடிப்படையான மூலாதாரங்கள் ……………………

f. தீர்வுகள் ……………………

g. இலக்கு ……………………

h. முயற்சியாளரின் பொதுவான பண்புகள் ……………………

**B**

**1.** ஜப்பானிய ஜின்ஸெங் ஆலையைப் பயன்படுத்தி உரம் உற்பத்தி
**2.** ஒரு புதிய கண்டுபிடிப்பு
**3.** சுற்றுச்சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப செயல்படும் திறன்
**4.** ஓவ்வொரு இடங்களில் தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் கழிவுகள்
**5.** எதிர்காலத்தில் வணிகம் என்ன நிலையில் இருக்கும் என்பதை புரிந்துக்கொள்ளல்
**6.** புத்துருவாக்கம்
**7.** தன்னம்பிக்கை
**8.** ஏரிகளில் மிக வேகமாக வளரும் ஜப்பானிய ஜபரா செடி
**9.** கடினமான இலக்குகளை அடைந்து கொள்வதற்கான தொடரும் போக்கு
**10.** சுய ஊக்கம்
**11.** கூட்டு
**12.** மீள்சுழற்சி மூலம் பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்தல்
**13.** எதிர்பாராத நிகழ்வுகள்
**14.** சுதந்திரம்

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

**15.** சந்தை மாற்றங்கள்

**(2) மிகப்பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1. முயற்சியாண்மை என்பது,
    1. சமுதாயத்திற்கு நல்லது செய்து நல்ல வாழ்க்கை வாழ்தல் ஆகும்.
    2. ஒரு நபர் சிந்திக்கும் மற்றும் தர்கிக்கும் முறை ஆகும்.
    3. ஒரு உரிமையாளர் தொழிலை நடத்தும் விதம்.
    4. சூழலில் உள்ள வணிக வாய்ப்புகளை இனங்கண்டு மனித சிந்தனையின் செயல்முறை மற்றும் ஆக்கத்திறன் மூலம் புத்துருவாக்கத்தில ஈடுபடுதலுடன் தொடர்புடைய மனித சிந்தனனையுடன் இணைந்த செயற்பாடு ஆகும்.

2. முயற்சியாளர் என்போர்.
    1. வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நபர்.
    2. வணிக உரிமையாளர்.
    3. திட்டமிடல் மற்றும் சரியான முடிவுகளை எடுப்பதன் மூலம் பொருளாதார மற்றும் சமூக மாற்றத்திற்கு உதவும் நபர்.
    4. எல்லாத் தடைகளையும் வென்று தன் எண்ணம் வெற்றியடையும் வரை பாடுபடுபவர்.

3. பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் முக்கிய காரணிகள்.
    1. 3 ஆகும்.
    2. 4 ஆகும்.
    3. 5 ஆகும்.
    4. 10 ஆகும்.

4. நிலம் உழைப்பு மூலதனம் முயற்சி என்பன
    1. இயற்கை வளங்கள் ஆகும்.
    2. புத்துருவாக்கம் ஆகும்.
    3. உற்பத்தி காரணிகள் ஆகும்.
    4. முயற்சியான்மையின் பண்புகள் ஆகும்.

5. காணி அடங்கும் உற்பத்தி காரணியாக அமைவது
    1. நிலம்
    2. உழைப்பு.
    3. மூலதனம்.
    4. முயற்சி.

6. மூலதனம் என்பதால் கருதப்படுவது
    1. அனைத்து இயற்கை வளங்களும்.
    2. அனைத்து பௌதீக வளங்களும்.
    3. அனைத்து உற்பத்தி காரணிகள்.
    4. அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகள்.

7. உற்பத்தி காரணிகளை ஒழுங்கமைப்பதன் மூலம் பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தி, விநியோகம், முதலியன நடைபெறுவது
    1. வணிக உரிமையாளரினால்
    2. வணிக முகாமையாளரினால்
    3. வணிக ஊழியர்களினால்

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

4. வணிக முயற்சியாளரினால்

8. கழிவு பொருட்களினால் உருவாக்கப்படும் புத்துருவாக்கமாக **கருதப்படாதது**
    1. வீட்டில் சேகரிக்கப்படும் குப்பைகளை எரித்தல்.
    2. கழிவு பேப்பரில் இருந்து பேப்பர் பைகளை தயாரித்தல்.
    3. ஆடைத் தொழிற்சாலையிலிருந்து தூக்கி எறியப்பட்ட துணிகளைப் பயன்படுத்தி விரிப்புகளைத் தயாரித்தல்.
    4. குடிபானக் குழாய் பயன்படுத்தி அலங்காரங்களை உருவாக்குதல்.

9. புத்துருவாக்கம் இடம்பெறும் ஒரு வழியாக **அமையாதது**
    1. ஒரு கலவை
    2. ஒரு நீட்டிப்பு
    3. எதிர்பாராத நிகழ்வு
    4. ஒரு புதிய கண்டுபிடிப்பு

10. இடருக்கும் பிரதிபலனுக்கும் இடையிலான தொடர்பை பற்றிய சரியான கூற்றாக அமைவது.
    1. இடருக்கும் பிரதிபலனுக்கும் எந்த தொடர்பும் இல்லை.
    2. இடர் அதிகமாக இருந்தால், வருமானம் குறைவாக இருக்கும்.
    3. குறைந்த இடர், குறைந்த வருமானம்.
    4. இடர் இல்லை என்றால் பிரதிபலன்கள் இல்லை.

11. பிறக்கும்போதே கால்களை இழந்த விமானி ஜெசிகா கோக்கின் வெற்றியின் மூலம் பிரதிபலிக்கும் முயற்சியாளரின் பண்பு
    1. கடினமான இலக்குகளை அடைந்து கொள்வதற்கான முயற்சி
    2. சுற்றுச்சூழல் மாற்றம் மற்றும் வாய்ப்புகளை இணங்கானல்
    3. தன் வெற்றி தன்னைப் பொறுத்தே அமையும் என்ற நம்பிக்கை.
    4. புத்துருவாக்கத்தில் உள்ள ஆர்வம்

12. மற்றவர்களின் கருத்துக்களை மதித்து ஏற்றுக் கொள்ளும் ஒரு முயற்சியாளர், முடிவுகளை எடுக்கும்போது சுதந்திரமாக சிந்திக்க முனைகின்றார். குறித்த பண்பானது உள்ளடங்குவது.
    1. நெகிழ்வுத்தன்மை.
    2. நேர்ச்சிந்தனை.
    3. சுதந்திரத்தன்மை.
    4. கடினமான இலக்குகளை அடைதல்.

13. ”நான் தோல்வியடையவில்லை. ஆனால் மின்குமிழ் செயலிழக்ககூடிய 999 முறைகள் உள்ளன என்பதை அடையாளம் கண்டேன்.’’ இந்த அறிக்கையை வெளியிட்டது,
    1. ஐசக் நியூட்டன்
    2. ஜெசிகா கோக்
    3. தாமஸ் ஆல்வா எடிசன்
    4. நிக் வோஜ்சிச்

14. வாடிக்கையாளர்கள் வரிசையில் நிற்பதை விரும்புவதில்லை என்பதை அறிந்த முயற்சியாளர் அவர்களின் வசதிக்காக, சுய சேவை கடைகள், இலத்திரனியல் கடைகள், இலத்திரனியல் பணம் செலுத்துதல் போன்ற புதுமைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. குறித்த முயற்சியாளரின் பண்பாக அமைவது.
    1. சுதந்திரத்தன்மை

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

2. ஆக்கத்திறன்
3. நெகிழ்வுத்தன்மை.
4. சுய ஊக்கம்.

15. முயற்சியாளரின் பண்புகளை மட்டும் உள்ளடக்கிய விடையை தெரிக
    1. ஆபத்தை ஏற்றுக்கொள்வது, உடனடி முடிவுகளின் எதிர்பார்ப்பு, ஆக்கத்திறன்
    2. உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்தல், செயன்முறைக்கு தடைகள் உள்ளன என நினைப்பது, சுதந்திரத்தன்மை
    3. பிரச்சனைகளை சவால்களாகப் பார்ப்பது, பின்பற்றுவது, புத்துருவாக்கம்.
    4. புத்துருவாக்கம், நெகிழ்வுத்தன்மை, கடினமான இலக்குகளை அடையும் போக்கு.

16. முயற்சியாளரிடம் காணப்படும் பண்பாக **கருதப்படாதது**
    1. தகவலைத் தேடியறிதல்
    2. எதிர்கால தூரநோக்கு
    3. சூழல் மீதான உணர்வு
    4. நேர்ச்சிந்தனை

17. பிறரைச் சார்ந்திருக்காமல் தன்னைத் தானே தன் எஜமானனாகக் கருதுதல்
    1. அர்ப்பணிப்பு ஆகும்
    2. பாரிய ஆசையாகும்
    3. தன்னம்பிக்கையாகும்
    4. பொது அறிவாகும்

18. கோவிட் 19 பேரழிவின் காரணமாக, ஆன்லைன் கல்விக்கான தேவை அதிகரித்துள்ளது. இது
    1. செயல்முறை தேவையால் ஏற்படும் மாற்றமாகும்.
    2. அறிவாற்றல், புரிந்து கொள்ளும் விதத்தில் ஏற்படும் மாற்றத்தால் ஏற்படுகின்றது.
    3. சமூகச் சூழலிலும், மக்களின் வாழ்க்கையிலும் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவாகும்.
    4. ஆராய்ச்சி மற்றும் பரிசோதனையின் முடிவாகும்.

**(3) பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

1. முயற்சியான்மை என்பதை வறையறுக்குக
2. முயற்சியாளர் என்பவர் யார்.
3. உற்பத்தி காரணிகளில் முயற்சியான்மை முக்கியமான காரணியாக கருதப்படுவது ஏன்?
4. முயற்சியாளரின் பண்புகள் 02 தருக
5. பிரதான உற்பத்தி காரணிகளைக் குறிப்பிடுக
6. உற்பத்தி காரணியான உழைப்பு என்பதனை வரையறுக்குக
7. மூலதனத்திற்கான 03 உதாரணங்களை தருக
8. முயற்சியாளரினால் எடுக்கப்பட்ட உற்பத்தி தொடர்பான முடிவுகளுக்கு 3 உதாரணங்கள் தருக
9. நீங்கள் கற்றுக்கொண்ட முயற்சியாளரின் பண்புகள் 04ஐ குறிப்பிடுக
10. எதிர்காலத்திற்கான நோக்கு என்ற முயற்சியாளரின் பண்பினால் கருதப்படுவது என்ன?
11. ஆக்கத்திறன் என்றால் என்ன?

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

12. சுற்றுச்சூழல் உணர்வுமிக்க நபராக நீங்கள் வாழும் சமூகத்தில் அடையாளம் காணப்பட்ட மூன்று பிரச்சனைகளையும் அவற்றைத் தீர்ப்பதற்கான 3 பரிந்துரைகளையும் எழுதுங்கள்.
13. ஆக்கத்திறனை தடுக்கும் காரணிகள் எவை?
14. ஆக்கத்திறனை தடுக்கும் காரணிகளை காரணிகளை அடையாளம் காண முடிந்தால், முயற்சியாளர் அவற்றைக் குறைத்து ஆக்கத்திறனை வளர்க்க முடியும். அதன்படி, ஆக்கத்திறனை விருத்தி செய்யக்கூடிய 04 நடவடிக்கைகளை குறிப்பிடுக.
15. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு விடயங்களுடன் தொடர்புடைய ஆக்கத்திறனை வளர்க்கக்கூடிய வழிமுறையா அல்லது தடையா என்பதை குறிப்பிடுக.
    1. தேவக ஒரு வேலையற்ற இளைஞராவார். அவர் மரக்கறிகள் பயிரிட்டு வந்ததுடன் கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக குறைந்த வருமானமே கிடைத்தது. அதனால் சோர்ந்துவிடாத அவர் மஞ்சள் பயிரிட தொடங்கினார். தற்போது மஞ்சளுக்கு காணப்படும் அதிகரித்த தேவையின் மூலம் உயர்ந்த வருமானம் பெற்றார்.

       ……………………………….
    2. தற்போது தேவையுள்ள சிசிடிவி கேமரா பொருத்தும் தொழிலை தொடங்க திட்டமிட்டுள்ள கிலேஷ், அதற்கு தனது தொழில்நுட்ப அறிவு போதாது என்று நம்புகிறார். அதனால் மூன்று மாத சிசிடிவி கேமரா நிறுவும் படிப்பை தொடர திட்டமிட்டுள்ளார்.

       ……………………………….
    3. DDI நிறுவனத்தின் நினைவேந்தல் விழாவில் நிறுவனர் உதய ஜீவந்தர சிறப்புரையாற்றினார். அந்நிறுவனத்தின் குறித்த வளர்ச்சியை நோக்கிய பயணத்தில் எதிர்கொண்ட (இனிப்பான மற்றும் கசப்பான) அனுபவங்கள் தொடர்பாக கூறினார். குறித்த சொற்பொழிவை கேட்ட மரச்சிற்பங்கள் செதுக்கும் காமினி எதிர்காலத்தில் தனது வணிகமும் மேம்பட்ட நிலையில் இருக்க வேண்டும் என்று உறுதியாக நம்புகிறார்.

       ……………………………….
    4. தச்சுத் தொழிலாளியின் மகளான உபமாலி, மரத்தளபாடங்கள் தயாரிப்பதில் சிறந்து விளங்கினார். இயற்கையாகவே காணப்பட்ட அந்த திறனை, தனது ஓய்வு நேரத்தில் தந்தைக்கு உதவுவதன் மூலம் அந்த உள்ளார்ந்த திறனை அவள் வளர்த்துக் கொண்டாள். திடீரென்று நோய்வாய்ப்பட்ட தந்தையினால் தொழில் செய்ய கடினமாக காணப்பட்டது. பெண்ணாக இருப்பதால் தச்சு வேலை மிகவும் பொருத்தமற்றது என்று உபமாலி நினைக்கிறாள். சிறிது காலத்தில் அவர்களின் தச்சுப் பட்டறை மூடப்படவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது.

       ……………………………….
    5. சுகதபால பேருவளையில் வசித்து வருவதுடன், மீன் விற்று வாழ்க்கை நடாத்தி வருகின்றார். இவர்களது வீடு காலி - கொழும்பு பிரதான வீதியை நோக்கி அமைந்துள்ளது. சமையலில் சிறந்து விளங்கும் அவரது மனைவி வருமானம் போதவில்லை எனக் கூறி ஒரு மாதத்திற்குப் பிறகு இரவு கடையை மூடினார்.

       ……………………………….

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

16. கீழே உள்ள இடைவெளிக்கு மிகப்பொருத்தமான சொல்லை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

( புத்துருவாக்கம், ஒருங்கிணைப்பு, இடர், இலாபம், பொதுவான அறிவு )

1. ஆக்கபூர்வமான சிந்தனைகளை பயனுள்ள ஒன்றாக மாற்றுதல் …………….. நடைபெறும்.
2. முயற்சியாளர் புத்துருவாக்க செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் …………….. மதிப்பீடு செய்யப்படும்.
3. புத்துருவாக்கம் நடக்கும் வழி …………….. ஆகும்
4. ஒரு வணிகத்தில் ஈடுபடுத்தப்படும் பணத்திற்கு போதுமான அளவு …………….. கிடைக்குமா என்பதை உறுதியாக கூற முடியாது.
5. …………….. முயற்சியாளர்களிடம் காணப்படும் பொதுவான பண்பாகும்.

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

17. புத்துருவாக்கத்தில் முயற்சியாளர்கள் இடர்களை ஏற்கின்றனர். நீங்கள் இந்த கூற்றுடன் உடன்படுகிறீர்களா? காரணம் தருக.
18. இடர் மற்றும் இலாபத்திற்கிடையிலான தொடர்பை தருக.
19. புத்துருவாக்கம் இடம்பெறக் கூடிய முறையினை எழுதி 2 உதாரணங்கள் வீதம் தருக.
20. புத்துருவாக்கம் இடம்பெற மூலகாரணமாக அமைவது சந்தை மாற்றங்களாகும். சந்தை மாற்றங்களினால் ஏற்பட்ட புத்துருவாக்கங்களுக்கு 2 உதாரணங்கள் தருக.
21. தனது வெற்றி தோல்வியை கண்ணுக்குத் தெரியாத சக்திகளிடம் ஒப்படைக்காத கையை இழந்த விமானி யார்?
22. முயற்சியாளருக்கு பொதுவாக காணப்படும் 3 பண்புகளை தருக.

(4) பின்வரும் சம்பவம் தொடர்பில் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.

எனது கிராமம் அங்குனகொலபெலஸ்ஸ. என் தந்தை ஒரு விவசாயி. மிளகாய் பயிரிட்டோம். சில சமயம் மிளகாய் விற்று நல்ல வருமானம் ஈட்டினோம். ஆனால் சில நேரங்களில் வருமானம் மிகக் குறைவு. உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்த பிறகு வருமானம் குறைவாக இருக்கும்போது மிளகாயைக் காய வைக்க நினைத்தேன். காய்ந்த மிளகாய்க்கு நல்ல கிராக்கி உள்ளது.

அவர்களுக்கு நிலையான விலை உள்ளது. அதனால் எங்களின் வருமானம் முன்பை விட சிறப்பாக இருந்தது. பல்கலைக்கழகம் செல்வதற்கு என்னிடம் போதிய மதிப்பெண்கள் இல்லை. அதனால் நான் மற்ற வேலைகளுக்கு விண்ணப்பித்தேன், ஆனால் வாக்குறுதியளிக்கப்பட்ட சம்பளம் போதுமானதாக இல்லை என்று உணர்ந்தேன். எங்கள் குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து, சொந்தமாக மிளகாய் தூள் வியாபாரத்தை தொடங்கினோம். எங்கள் மிளகாய் வாங்குபவர்களிடமிருந்து எனக்கு நல்ல ஆதரவு இருந்தது. அவர்களுடன் தொடர்ந்து தொடர்பு கொண்டு எனக்குத் தேவையான தகவல்களைப் பெற முடிந்தது.

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

2018 இல், நான் ‘சில்லி’ என்ற மிளகாய் தூள் பொதி செய்யும் வியாபாரத்தை தொடங்கினேன். எனது சொந்த முச்சக்கர வண்டியில் தேவைப்படுபவர்களுக்கு அவற்றை விநியோகித்தேன். கடை உரிமையாளர்களுக்கு 2 வாரக் கடன் கால அவகாசம் அளித்ததால், எனது மிளகாய்த் தூளை அதிகம் வாங்க வேண்டும் என்ற ஆர்வம் அவர்களுக்கு ஏற்பட்டது, எனக் கூறியமை மகிழ்ச்சியாக இருந்தது.

என் வருமானம் முன்னரை விட உயர்ந்து கொண்டே இருந்தது. எனது தந்தையின் பெயரில் வங்கிக் கணக்கு தொடங்கி 2 வாரத்திற்கு ஒருமுறை ரூ.5000 வங்கியில் வைப்பு செய்து எதிர்காலத்தில் எங்கள் தொழில் வளர்ச்சிக்கு தேவையான பணத்தை திரட்டினேன். இந்த வியாபாரத்தின் முன்னேற்றம் மற்றும் எங்கள் முன்னேற்றத்தை நான் எப்போதும் நினைத்தேன். சில வேதனையான அனுபவங்கள் இல்லாமல் இல்லை. ஆனால் நான் நம்பிக்கையுடன் இருந்தேன். நான் என் முயற்சியில் நம்பிக்கை வைத்தேன்.

அந்த நம்பிக்கைதான் என்னை இந்த இடத்திற்கு கொண்டு வந்தது. இன்று, எனது வியாபாரத்தில் மிளகாய்ப் தூளைத் தவிர, பொலஸ் மற்றும் இறைச்சிக் கறிகளை சுவைக்கப் பயன்படும் மசாலா கலவையையும் உற்பத்தி செய்கின்றேன். அதற்கு நாங்கள் சொந்தமாக உற்பத்தி செய்தும் மற்றும் மூன்று வழங்குனர்களிடம் இருந்தும் மிளகாயை வாங்குகிறோம். மசாலா உற்பத்தி தொடர்பான பயிற்சி நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு எனக்கு தேவையான அறிவை பெற்றுக்கொண்டேன்.

கூடுதலாக, தென் மாகாணத்தில் 2020 வளர்ந்து வரும் சிறு முயற்சியாளர் விருதையும் வென்றுள்ளேன். மேலும் எனக்கு ரொக்கப் பரிசாக ரூபாய் 2000 000 கிடைத்தது. இதன் மூலம் எனது தொழிலை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல முயற்சிக்கிறேன். அதன் மூலம் எனக்கும் எனது கிராமத்துக்கும் சேவை செய்ய வேண்டும் என்பது எனது உறுதி.

1. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள முயற்சியாளரிடம் காணப்படும் முயற்சியாளரருக்குரிய 4 பண்புகளை எழுதுக.
2. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள புத்துருவாக்கம் எவ்வாறு செயல்படுகின்றன என்பதற்கான உதாரணங்களை குறிப்பிடுக.
3. ஆக்கத்திறனை மேம்படுத்தக்கூடிய காரணிகள் இங்கே உள்ளன. அவற்றில் 2 குறிப்பிடுக.
4. முயற்சியாளரிடம் காணப்படும் பொதுவான பண்புகள் காணப்படுகின்றன. அவை எவை?
5. இந்த வணிகத்திற்கான பொருத்தமான தூரநோக்கு ஒன்றைக் குறிப்பிடுக.

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

COMMERCE & BUSINESS STUDIES BRANCH